# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தம்)

***1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*தொழில் அமைச்சர் அவர்களால் 2020, ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2020, ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **9 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 3 ஆம் பிரிவை திருத்துகின்றதுடன் திருத்தப்படுகின்றவாறான அப்பிரிவின் சட்டப்பயன் "இளம் ஆட்கள்" என்னும் வரைவிலக்கணத்துக்கு இணங்க "இளம் ஆட்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படவேண்டிய பதினாறு வயதுக்கும் பதினெட்டு வயதுக்கும் இடையில் உள்ள இளம் ஆட்களுக்கு குறிப்பீடுசெய்வதற்குமாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், 2 ஆம் வாசகத்துக்கான விளைவாந்தன்மையினதான திருத்தமொன்றாகும்.

**வாசகம் 4 :** (1) இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு மற்றும் (2) ஆம் உட்பிரிவை திருத்துகின்றதுடன் அப்பிரிவின் சட்டப்பயன் -

(அ) கலம் ஒன்றில் தொழிலுக்கமர்த்துவதற்கான குறைந்தபட்ச வயதை பதினைந்து வயதிலிருந்து பதினாறு வயதுக்கு அதிகரிப்பதற்குமாகும்; அத்துடன்

(ஆ) பாடசாலைக் கப்பல்கள் மற்றும் பயிற்சிக் கப்பல்களில் தொழிலுக் கமர்த்துவதற்கான குறைந்தபட்ச வயதை பதினைந்து வயதிலிருந்து பதினாறு வயதுக்கு அதிகரிப்பதற்குமாகும்.

(2) முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குகின்றதுடன் (1) ஆம் உட்பிரிவு மற்றும் (2) ஆம் உட்பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை நீக்குகின்றதுடன் 4 ஆம் வாசகத்துக்கான விளைவாந்தன்மையினதான திருத்தமொன்றுமாகும்.

**வாசகம் 6 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை திருத்துகின்றதுடன் அப்பிரிவின் சட்டப்பயன் -

(அ) ''பிள்ளை'' என்னும் வரைவிலக்கணத்துக்கு இணங்க (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிள்ளை மற்றும் இளம் ஆளுக்கு குறிப்பீடுசெய்வதற்குமாகும்; அத்துடன்

(ஆ) ''இளம் ஆள்'' என்னும் வரைவிலக்கணத்துக்கு இணங்க (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பதினான்கு வயதை எய்தியுள்ள ஆனால் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆட்களுக்கு குறிப்பீடுசெய்வதற்குமாகும்.

(இ) ''இளம் ஆள்'' என்னும் வரைவிலக்கணத்துக்கு இணங்க (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பதினாறு வயதை எய்தியுள்ள ஆனால் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆட்களுக்கு குறிப்பீடுசெய்வதற்குமாகும்.

**வாசகம் 7 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவை திருத்துகின்றதுடன் திருத்தப்படுகின்றவாறான அப்பிரிவின் சட்டப்பயன் -

(அ) "பிள்ளை", "இரவு" மற்றும் "இளம் ஆள்" என்னும் சொற்களின் வரைவிலக்கணங்களை திருத்துவதற்குமாகும்;

(ஆ) தொடக்கப் பாடசாலை செல்கின்ற ஆளொருவரின் வயதை பதினாறாக அதிகரிப்பதற்கு மாகும்.

## பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தம்)

*ச.வ.- ஓ. 33/2018*

### *1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயர்.*

***1.*** இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கச் சட்டத்தின் 3ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (3) ஆம் உட்பிரிவில் ''பதினாறு வயதை எய்தியுள்ள ஆனால் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்களாகவுள்ள இளம் ஆட்களை'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''ஆண்களாகவுள்ள இளம் ஆட்களை'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (4) ஆம் உட்பிரிவில் ''பதினாறு வயதுக்கும் பதினெட்டு வயதுக்கும் இடையில் உள்ள ஆட்களுக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இளம் ஆட்களுக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அதன் (5) ஆம் உட்பிரிவில் ''பதினாறு வயதுக்கும் பதினெட்டு வயதுக்கும் இடையில் உள்ள ஆட்கள் தொடர்பில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இளம் ஆட்கள் தொடர்பில்,'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் "பதினாறு வயதை எய்தியுள்ள ஆனால் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆளொருவர்" என்னும்சொற்களுக்குப் பதிலாக "இளம் ஆள் ஒருவர்," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (அ) என்னும் பந்தியில் ''பதினைந்து வயதின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பதினாறு வயதின்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில் ''பதினைந்து வயதிற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பதினாறு வயதிற்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பந்தியின் (ஆ) என்னும் பந்தியில், ''பதினைந்து வயதிற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினாறு வயதிற்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிடுவதன் மூலமும்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவை நீக்குதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் "பதினாறு வயதை யடையாத பிள்ளை அல்லது இளம் ஆள் எவரும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "பிள்ளை எவரும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில் ''பதினான்கு வயதை எய்தியுள்ள ஆனால் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆளெவரும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "இளம் ஆள் எவரும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அதன் (4) ஆம் உட்பிரிவில் ''பதினாறு வயதை எய்தியுள்ள ஆனால் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆளொருவருக்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''இளம் ஆள் ஒருவருக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) ''பிள்ளை'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

''பிள்ளை'' என்பது, பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும்;"

(ஆ) ''கைத்தொழில் பொறுப்புமுயற்சி'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தின் (இ) என்னும் பந்தியில் "பதினான்கு வயதுக்குக்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினாறு வயதுக்குக்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) "இரவு'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

" "இரவு'' என்பது,

(அ) பெண்களை தொழிலுக்கமர்த்துதல் தொடர்பாக பிற்பகல் 10 மணிக்கும்

*முற்பகல் 5 மணிக்கும் இடையிலான காலப்பகுதி உள்ளடங்கலாக குறைந்த பட்சம் தொடர்ச்சியான பதினொரு மணித்தியாலங்கள் எனப் பொருள்படும்; அத்துடன்*

(ஆ) *பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆட்களை தொழிலுக்கமர்த்துதல் தொடர்பாக முற்பகல் 6 மணிக்குப் பிந்தாமல் முடிவடையவேண்டியதும் அத்துடன் –*

(i) *பதினாறு வயதை எய்தியுள்ள அவ்வாட்களுள் அத்தகையோரின் விடயத்தில்* (ii) *ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய பிற்பகல் 10 மணிக்கும் முற்பகல் 6 மணிக்கும் இடையில் அடங்கியுள்ள குறைந்த பட்சம் தொடர்ச்சியான ஏழு மணித்தியாலங்களை உள்ளடக்க வேண்டியதும்,; அத்துடன்*

(ii) *பதினாறு வயதை எய்தியுள்ளவர்களும் வெதுப்பகக் கைத் தொழிலில் தொழிற்பயிற்சிக்கு உட்பட்டுள்ளவர்களுமான அல்லது அக்கைத்தொழிலில் தொழில் பயிலுனர்களாகவுள்ளவர்களுமான அவ்வாட்களுள் அத்தகையோரின் விடயத்தில், எல்லா வேலையாட்களுக்கும் அக்கைத்தொழிலிலான இரவு வேலை தடைசெய்யப்பட்டிருப்பின் அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அவ்வாறு பணித்தால்* (i) *என்னும் உட்பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட*

குறைந்தபட்சம் தொடர்ச்சியான ஏழு மணித்தியால காலப்பகுதிக்குப் பதிலாக பிற்பகல் 9 மணிக்கும் முற்பகல் 4 மணிக்கும் இடையில் அடங்கியுள்ள தொடர்ச்சியான ஏழு மணித்தியாலங்களை உள்ளடக்க வேண்டியதுமான,

குறைந்தபட்சம் தொடர்ச்சியான பன்னிரெண்டு மணித்தியாலங்கள் எனப் பொருள்படும்;";

(ஈ) ''இளம் ஆள்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாக பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :-

''இளம் ஆள்'' என்பது, பதினாறு வயதை எய்தியுள்ள ஆனால் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும்."; அத்துடன்

(2) அதன் (2) ஆம் உட்பந்தியின் (அ) என்னும் பந்தியில், "பதினான்கு வயதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக ''பதினாறு வயதை'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.